**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 57/2017</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேசன் | தந்தை பெயர் | : | மாணிக்கம் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 12.09.2025

**P.W. : 2**

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணி புரிந்து வருகிறேன். எங்கள் அலுவலகத்திற்கு இந்த வழக்கில் வாதி தரப்பில் சாட்சி அழைப்பாணை வந்துள்ளது. அந்த அழைப்பாணையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், கொட்டப்பட்டு கிராமம், செம்பட்டு பட்டா எண்.322 இல்

கட்டுப்பட்ட சர்வே எண்.265/3 தொகுப்பு வரிசை எண்.10/10/42 இல் கட்டுப்பட்ட சொத்திற்கான ஆவணங்களின் சான்று நகல்களை எடுத்து வந்துள்ளேன். நான் கொண்டுவந்துள்ள ஆவணமானது, 1927 அன்று மேற்படி சொத்தை பொறுத்து ஏற்பட்ட செட்டில் மெண்ட் பதிவேடாகும். அதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும். அந்த ஆவணத்தில் குடும்பத்தலைவன் தி.கோவிந்தன் என்கிற இராமன் அம்பலக்காரர் என்ற பெயரில் சர்வே எண். 265/3 – பொறுத்து பதிவு ஏற்பட்டுள்ளது. அதன் விஸ்திரனம் 28 சென்ட் ஆகும். மேற்படி சொத்தைப் பொறுத்து வா.சா.ஆ.6 செட்டில் மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வட்டாட்சியரால் குடும்பத்தலைவன் தி.கோவிந்தன் அம்பலக்காரர் என்ற பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** :

மேற்படி பட்டாவில் கண்ட சொத்து முதலில் கோவிந்தன் அம்பலக்காரர் என்ற பெயரில் இருந்தது. தற்போது அந்த சொத்திற்கு யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் நான் கொண்டு வந்த ஆவணங்களில் அந்த விவரம் இல்லை. எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி கோவிந்தன் அம்பலக்காரரின் தந்தை பெயர் திருப்பதி என்று அந்த பட்டாவில் போடப்பட்டுள்ளது. அந்த பட்டா எண்.386 என்று உள்ளது. பட்டா எண். 386 என்பது வேறு பட்டா ஆகும். சம்மனில் இணைக்கப்பட்டிருந்த பட்டா எண்.322 ஆகும். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.386 என்ற நகலில் சர்வே எண். 240/2 என்று காட்டப்பட்டுள்ளது. பரப்பளவு – 53 சென்ட் என்று உள்ளது. திருப்பதி

த/பெ. கிருஷ்ணன் என்பவருக்கு எங்கள் பதிவேட்டில் தனி பட்டா உள்ளதா என்றால், ஆவணங்களை பரிசீலனை செய்து தான் சொல்ல முடியும்.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.